# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN : 2278-2311


## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

சேலம்

(பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

(Recognized under section 2(f) & 12(B) of UGC Act, 1956, Accredited by NAAC & an ISO 9001:2008 Certified Institution)

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

**பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர், 04 - 2019**

## இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

# சான்றிதழ்

திரு / திருமதி/ செல்வி/ ........முனைவர் சு.மாரித்தங்கம்........ என்பவர்/ என்பவர்களால் எழுதப்பட்ட

........குறுந்தொகையில் காதல்........

என்ற ஆய்வுக் கட்டுரையானது லிட்டெரி ஃபைண்டிங்ஸ் – பன்னாட்டுத் தமிழியல் ஆய்வு இதழில் (அக்டோபர்– 2019, மலர்–8, இதழ்–9,

ISSN: 2278-2311 ) பிரசுரிக்கப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைப்பாளர் | முதல்வர் | செயலாளர் | தாளாளர் | பதிப்பாசிரியர் லிட்டெரி ஃபைண்டிங்ஸ்

# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN 2278-2311


## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது

சேலம்.


தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

6

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர்-04-2019

## இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்



OCTOBER - 2019


visit us : www.kongunadupublications.com

kongunadupublications@gmail.com

# LFS

# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN: 2278-2311

VOL: 8 OCTOBER - 2019 ISSUE: 9

## PUBLISHING EDITOR

**Nall Natarajan**

*Kongunadu Publications (India) Private Limited, Erode.*

kongunadupublications@gmail.com

## EDITOR

**Dr. B.Sankareswari**

*Madurai Kamaraj University, Madurai.*

sankaritamil@gmail.com

## EDITORIAL AND ADVISORY BOARD

**Dr.A.Govindarajan**
*Bharathidasan University, Tiruchirappalli.*
govindarajan.bdu@gmail.com

**Dr.C.Karthikeyan**
*Tamil Nadu Open University, Chennai.*
karthikeyan251973@gmail.com

**A.Mariya Sebasthiyan**
*VIT University, Velur.*
maryasepastin.a@vit.ac.in

**Dr. K.Paulin Preetha Jebaselvi**
*Bishop Heber College, Trichy.*
kpauline@bhu.edu.in

**Dr.T.K Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

## பதிப்பாசிரியர்

நல் நடராசன்

*கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் (இந்தியா) பி.லிட், ஈரோடு.*

kongunadupublications@gmail.com

## ஆசிரியர்

முனைவர் பா.சங்கரேஸ்வரி

*மதுரை காமராசர்பல்கலைக்கழகம், மதுரை.*

sankaritamil@gmail.com

## ஆசிரியர் குழு

முனைவர் அ.கோவிந்தராஜன்
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,திருச்சிராப்பள்ளி.*
govindarajan.bdu@gmail.com

முனைவர் சி கார்த்திகேயன்
*தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
karthikeyan251973@gmail.com

அ.மரிய செபஸ்தியான்
*வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்*
maryasepastin.a@vit.ac.in

முனைவர் க.பாலின் பிரீதா ஜெபசெல்வி
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி*
kpauli e@bhu.edu.in

முனைவர் தா.க.அனுராதா
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்*
anukeerthigan@gmail.com

முனைவர் பரமசிவம் முத்துசாமி
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா*
mparam98@gmail.com

R.F.அரூஸ்
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை*
raapa.arooz@gmail.com

முனைவர் க.காயத்ரி
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்*
*gayathiripraba1981@gmail.com*

முனைவர் எஸ்.குமரன்
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா*
*skumaran.um@gmail.com*

16. அகநானூற்றில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் - 47
*முனைவர் து.கனஜாதேவி

17. அர்த்தமுள்ள இந்துமதம் உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்கள் - 50
*முனைவர் அ.அமுதா

18. பழமொழி உணர்த்தும் வாழ்வியல் - 53
*முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய்

19. கலித்தொகை உணர்த்தும் வாழ்வியல் கூறுகள் - 57
*முனைவர் இரா.ஜெயஸ்ரீ

20. புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் வாழ்வியல் - 60
*முனைவர் அ.கல்பனாதேவி

21. பாத்திமுத்து சித்தீக் புதினத்தில் மன்சூரின் நாட்டுப்பற்றும் வாழ்வியலும் - 63
*மா.நஜ்மூன்

22. குறுந்தொகையில் காதல் - 66
*முனைவர் சு.மாரித்தங்கம்

23. அறப்பளீசுர சதகத்தில் வாழ்வியல் கூறுகள் - 68
*முனைவர் இரா.நி.ஸ்ரீகலா

24. நற்றாய்வழி அறியலாகும் வாழ்வியல் கூறுகள் - 71
*முனைவர் சு.லோகிதா

25. பஞ்சபூதங்களில் சித்தர்களின் இறைமை சிந்தனைகள் - 74
*சு.சசிகலா

26. புறநானூற்றில் போர் - 77
*டாக்டர் ந.புனிதலெட்சுமி

27. சங்க கால வாழ்வில் தாவரங்கள் - 79
*சி.கலைவாணி

28. நாவல் இலக்கியத்தில் வாழ்வியல் கூறுகள் - 81
*த.ஆதிலெட்சுமி

29. கிறித்தவக் காப்பியங்களில் வாழ்வியல் விழுதுகள் - 83
*சகோ. முனைவர் க.மங்கள சுந்தரி

30. இயேசுக் காவியத்தில் வாழ்வியல் கோட்பாடு - 87
*த.குளோரி

# குறுந்தொகையில் காதல்

*முனைவர் சு.மாரித்தங்கம், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம்.

**முன்னுரை**

பழங்கால தமிழ் மக்களின் வாழ்வியல், ஒழுக்கம், உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை நம் சங்க இலக்கியப் பாடல்கள் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலப்பரப்புகளில் வாழ்ந்த மக்களின் மரபுகளை சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. நிலத்தையும், பொழுதையும் அடிப்படையாகக் கொண்டு ஐவகைத் திணைகளில் வாழ்ந்த மக்களின் வாழ்வு அகம், புறம் என இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டையும் இரு கண்களாக பாவித்தனர் சங்ககால மக்கள். அவற்றுள் காதலுக்கென்று தனி இடத்தினை சங்க இலக்கியங்கள் பிடித்துள்ளன. எட்டுத்தொகையில் குறுந்தொகையில் இடம்பெறும் காதல் பற்றிய கருத்துகளை இக்கட்டுரையில் காண்போம்.

**காதல் - தமிழரின் மரபு**

பழந்தமிழரின் வாழ்வில் திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்வியல் நெறிமுறையாகவே இருந்துள்ளது. திருமணத்திற்கு முந்தைய **"காதல் வாழ்வு"** களவொழுக்கம் என்றும், திருமணத்திற்குப் பிறகு அவர்களின் இல்லற வாழ்வு கற்பொழுக்கமாகவும் போற்றப்பட்டுள்ளது. இவை சார்ந்த நிகழ்வுகளும், அதன் கதாப்பாத்திரங்களும் அகப்பாடல்கள் வாயிலாக நமக்கு உணர்த்தப்படுகிறது. காதலனும், காதலியும் தலைவன், தலைவி என்று வர்ணிக்கப்பட்டாலும், பாங்கனும், பாங்கியும் இல்லாமல் காதல் நிகழ்வுகள் அமையவில்லை எனலாம்.

**முதல் சந்திப்பு**

தலைவனும், தலைவியும் எதிர்பாராத சூழ்நிலையில் சந்தித்தல், ஊழின் ஏவலால் காதல் வயப்படுதல் போன்ற நிகழ்ச்சிகள் இயற்கைப் புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி என்று கூறப்படுகின்றது.

அம்பு தைத்த யானை சினம் கொண்டு ஓடி வரும் பொழுது காதலன் காதலியைக் காப்பாற்றுகிறான். இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. இவ்வகைக் காட்சிகள் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

**"கான யானை அணங்கி யாஅங்கு**
**வளையுடைக் கையள் - எம் அணங்கி யோளே"** (குறு. 119)

என்ற பாடலடிகள் இளையோள் ஒருத்தியால் வந்துற்றது இவ்வருத்தம் என்று தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது.

**செவிலித்தாய் குறி கேட்டல்**

செவிலித்தாய் தலைவியின் வளர்ப்புத் தாயாவாள். தலைவியின் செயல்களில் மாற்றத்தைக் கண்டவுடன் குறி கூறும் குறத்தியை அழைத்து இம்மாற்றத்திற்கு காரணம் என்ன? என்று வினவுகிறாள். குறத்தி குறி சொல்லும் முன் மலைவளத்தின் சிறப்பினைப் பாடுகிறாள். தலைவனின் மலை வளம் பற்றிய பாடல் வரும் பொழுது தோழி,

**"இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"** (குறுந்: 23)

என்று தலைவனின் மலையைப் பற்றிய பாடலை மட்டும் பாடு, பாடிக்கொண்டே இரு என்று செவிலித்தாய்க்கு தலைவியின் நிலையினை எண்ணி ஏற்பட்டுள்ள ஐயத்தை உறுதிப்படுத்துகிறாள்.

**"கருங்கண் தாக்கலைப் பெரும் பிறிது உற்றெனக்**
**சாரல்நாட நடுநாள் வாரல் வாழியோ**
**வருந்துதும் யாமே "** (குறுந்:69)

என்ற பாடலடிகள் இரவில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனிடம் இரவுக்குறி வந்து சந்திக்கும் செயலகூடாது என்றும், அது இடர்நிறைந்தது என்றும், வரைவுக்கு உடன்பட வேண்டும் என்றும், தோழி கூறுவதாக அமைகின்றது. தலைவிக்கும், தலைவனுக்கும் ஆதரவாகத் தோழி விளங்குவதை இச்செய்தி மூலம் அறியலாம்.

**ஊடலும் கூடலும்**

மருதத்திணையில் தலைவன், தலைவிக்கு இடையிலான ஊடலும் ஊடல் நிமித்தங்களும் கூறப்பட்டுள்ளன. கணவன் பரத்தையிடம் சென்று விட்டு திரும்புதல் போன்ற நிகழ்வுகளும் இதில் அடக்கம். பரத்தை என்ற சொல்லிற்கு ஆடல், பாடலில் சிறந்தவர் அல்லது மற்றொருவர் பெண்டிர் எனவும் பல பொருள் உண்டு. பரத்தையை விட்டிருந்து சென்ற கணவன் மீண்டும் வீடு திரும்ப பாணனிடம் தூது விடுகிறான். தலைவியிடம் வந்த பாணன் தலைவனின் தேர் பரத்தமை சேரிக்கு இதுநாள் வரை சென்றதில்லை என்கின்றான். மாயத்தலைவனின் சொற்களை மற்றொரு பரத்தை நம்பி இருப்பாள். அவளின்

ஊடலை நீ சென்று தீர்ப்பாயாக என்று தலைவி கூறுவது உண்டு. ஊடல், ஊடல் தணிந்து இருவரும் கூடல், விருந்தோம்பல் போன்ற செய்திகளும் இத்திணையில் இடம் பெற்றுள்ளது. தவறு செய்ததால் தலைவனைப் பாங்கன் இடித்துரைக்கும் செயலும் நிகழ்வதுண்டு.

**"நான் தவறு செய்வதாக இடித்துரைக்கும்**
**நண்பனே ! நமது அருஞ்செயலாக என்**
**காம நோயைத் தடுத்து நிறுத்தலைச்**
**செய்வீராயின் மிக்க நன்று"** (குறுந் : 184)

என்ற பாடலடிகள் தலைவனுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது.

**தலைவியின் அன்பு**

பரத்தமை மேற்கொண்ட தலைவனிடத்தும், மறுபிறப்பிலாவது நின் நெஞ்சம் நிறைபவளாகத் தான் ஆக வேண்டும் என வேண்டுகிறாள் தலைவி.

**"இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சுநேர் பவளே"** (குறுந் : 49)

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகின்றது. மேலும்,

**"பெருங்கல் நாடன்**
**இனியன் : ஆகலின் இனத்தின் இயன்ற**
**இனிது எனப் படுஉம் புத்தேள் நாடே"** (குறுந் : 288)

என்ற பாடலில் பெரிய மலை நாட்டைச் சேர்ந்த தலைவன், நமக்கு என்றுமே இனியன் ஆவான் என்று தலைவி கூறுவதிலிருந்து தலைவன் மீது கொண்ட அன்பு வெளிப்படுகிறது.

**இரவுக்குறி இடையீடு**

தலைவன் தலைவியை இரவுப் பொழுதில் வந்து சந்திப்பதால் நேரும் இன்னல்களை தலைவனுக்கு எடுத்துரைத்து அவனை வரைவுக்கு உடன்படுமாறு தோழி உரைக்கும் செய்திகள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது.

**"கொடுந்தாள் முதலைக் கோள்வலை ஏற்றை**
**வழிவழக்கு அறுக்கும் கானல்அம் பெருந்துறை**
**அஞ்சுவல் பெரும - என நெஞ்சத்தானே"** (குறுந்: 324)

என்ற பாடலில், தலைவி இனிப் பகற்குறிக்கண் வரமாட்டாள் என்று தோழி கூறத் தலைவன், இரவு நேரத்தில் வந்து சந்திப்பதாகக் கூறுகின்றான். அதைக் கேட்ட தோழி, திரளான மீன்களையுடைய கரிய கழியினை நீந்திக் கடந்து வரும்போது ஏற்படும் இன்னல்கள் ஏராளம். அதைக் கண்டு தலைவி வருந்துவாள் என்று கூறுகின்றாள்.

**இற்செறித்தல்**

தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்ட பின், தலைவிக்கு காவல் மிகுதியாகின்றது. தலைவி இற்செறிக்கப்பட்டதால், இரவுக்குறியில் சந்தித்தல் இயலாது என்ற செய்தியை தலைவனுக்குத் தோழி உரைக்கின்றாள். இச்செய்தியை,

**"நிரைவளை முன்கை நேர்இழை மகளிர்**
**வல்விற் காணவர் தங்கைப்**
**பெருந்தோட் கொடிச்சி இருந்த ஊரே"** (குறு: 335)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

இற்செறிக்கப்பட்டதை தலைவனுக்கு அறிவுறுத்தியும் தலைவன் மனம் வரைவின்கண் செல்லவில்லை, களவின் கண்ணே செல்கிறது. அதைக் கண்ட தோழி

**"குன்ற நாட ! தகுமோ - பைஞ்சுனைக்**
**நயந்தோர் புண்கண் தீர்க்கும்**
**பயந்தலைப் படாஅப் பண்பினை எனினே"** (குறுந். 342)

என்ற பாடலில் உணர்த்துகின்றாள்.

**செலவழுங்குதல்**

பொருளைத் தேடி வருதலின் பொருட்டாகத் தலைவியைப் பிரிந்து போவதற்குத் தூண்டும் தன் நெஞ்சிற்குத் தலைமகன் தன்னால் தலைவியைப் பிரிய இயலாமையைச் சொல்லித் தன் செலவை நிறுத்திக் கொள்ளுகின்றான். இச்செய்தியை

**"மல்குசுனை உலர்ந்த நல்கூர் சுரமுதல்**
**குமரி வாகைக் கோலுடை நறுவி**
**நன்றே நெஞ்சம் ! நயந்தநின் துணிவே"** (குறுந் : 347)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

**முடிவுரை**

நம் பண்டைத் தமிழறிஞர்கள் அமைத்துச் சென்ற செய்யுட்களுள், அகப்பொருளைப் பற்றியவாக விளங்கும் செய்யுட்கள் தனித்த சிறப்பினைக் கொண்டதாக அமைத்துள்ளது. தலைவனும், தலைவியும் கூடி வாழ்ந்து புதல்வரைப் பெற்று அறங்களைச் செய்து புகழ்பெறுவது நிகழக்கூடிய செய்திகளே. குறுந்தொகையில் கூறப்பட்டுள்ள செய்திகள் உள்ள உணர்வுகளுக்கு உருகொடுக்கும் கருப்பொருளாக அமைந்துள்ளதில் வியப்பில்லை என்பது நன்கு புலனாகும்.